14 காலணா Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே"


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ACC-NO-10813

ஆசிரியர் :
சங்கு ஸுப்ரஹ்மணியன.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. திங்கள் 27–2–33

மகாமக பிரசாதமா?



கும்பகோணத்திற்கு 144 வீசப்பட்டிருப்பதாக பிரீ பிரஸ்ஸுக்கு செய்தி வந்திருக்கிறது. மத சம்பந்தமான கூட்டங்களைத் தவிர, இதர கூட்டங்களை அவ்வூரில் நடத்தலாகாதென்று தஞ்சை கலெக்டர் தாக்கீது போட்டு விட்டாராம். ஹரிஜன ஆலயப் பிரவேச விஷயமான கூட்டங்களையும் அந்த உத்தரவு தடுக்குமாம். "கோயிலில் விட வேண்டும்!" என்று கூறும் சீர்திருத்தக்காரனையும் "கோயிலில் விடலாகாது" என்று கூறும் யதாபூர்வியையும் எல்லோரையும் சரிசமமாக இந்த 144 தடுத்திருக்கிறது வாஸ்தவமா?

வரவு செலவு திட்ட வம்பு

காட்டில கட்குடி பலமாயிருக்கும் வரை இந்த மாகாண சர்க்காருக்கு என்ன குறைச்சல்? சென்ற வருடத்தை விட இந்த வருடத்தில் கள் இலாகா 62 லக்ஷ ரூபாய் அதிகம் தந்திருக்கிறது. முன்னே போட்ட மதிப்பை விட 16 லக்ஷ ரூபாய்க்கு 'ஸ்டாம்பு'கள் விற்றிருக்கின்றன. இந்த மாதிரி இனங்களில் வருமானம் அதிகம் ஏற்பட்ட காரணத்தினால் தான் சென்னை வரவு செலவு திட்டம் சிங்காரித்துக் கொண்டு சட்ட சபையில் அன்று உலாவிற்று.

"1932-33ம் வருடத்து சீர்திருத்திய வரவு செலவு திட்டத்தின்படி வரவு 1689 லக்ஷம்; செலவு 1626 லக்ஷம் தான். 1933-34க்கு போடப்பட்டுள்ள வரவு செலவு மதிப்புப்படி வரவு 1726 லக்ஷம்; செலவு 1722 லக்ஷமே" என்று கூறியபோது ஸ்டோக்ஸ் என்ற பொக்கிஷ மந்திரியின் முகத்தில் சந்தோஷம் தாண்டவமாடிற்று 'தொட்ட தெல்லாம் பொன் கை' யென்று தமது லாபம் தரும் கையை அவர் புகழ்ந்து கொண்டார் போலும்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சென்ற வருடச் சம்பளங்களை இந்த வருஷத்தில் உயர்த்தி யிருக்கிறார்களல்லவா, அதைப்பற்றி பிரமாதமாக புகழ்ந்து கொண்டு இந்த பொக்கிஷ மந்திரி பேசினார். 'முன்னே சர்க்கார் ஊழியர்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டோ மல்லவா?' என்று களிதுள்ளுமாறு பேசினார்.

ஆனால் நிலத் தீர்வை வஜா விஷயமாக அவர் பேசத் தலைப்பட்ட போது அவருடைய வாக்குவாதம் மிக்க கீழ்த் தரமாகவே இருந்தது. "ரூபாய்க்கு இரண்டணாவை ஒரு வருடத்துக்கு மட்டும் தள்ளிக் கொடுத்தால் 74 லக்ஷ ரூபாய் தான் சர்க்கார் கையைக் கடிக்கும். அந்தப் பணத்தை சமாளிக்க சர்க்காரால் முடியு மென்பதும் வாஸ்தவமே. ஆனால் இப்போது அவ்வாறு வஜா செய்து விட்டால் பிறகு ஒவ்வொரு பசலிக்கும் வஜா செய்ய வேண்டு மென்ற கூக்குரல் ஏற்பட்டுக் கொண்டே யிராதா? மிராசுதார்கள் இன்னும் 12 மாதங்களுக்கு கூச்சலிட்டுக் கொண்டிரா திருப்பார்கள். ஆனால் ¾ கோடியை சர்க்கார் இழக்கலாமா?.......இந்தப் பணத்தை இழந்தால் கல்வி, வைத்தியம், முதலிய துறைகளில் செலவிட காசில்லாது போகு மன்றோ!" என்ற கருத்துக்கள் அவரது பேச்சில் வெளி வந்தன.

"பசுவை யடித்து செருப்பு தானம் செய்வது நியாயமா?" வென்று ஓர் பழமொழியுண்டு. அந்த மாதிரி இப்போது மிராசுதாரன் படுகின்ற கஷ்டத்தை யறிந்த பின்னரும் அவனுடைய வரிப் பணத்தில் துளி யளவு கூடக் குறைக்காமல் கெடுபிடி ஜப்திகள் செய்து அப்பணத்தை உதவாக்கரையான ஓர் கல்வி முறையில் கொட்டுவதை யார் அநுமதிப்பார்கள்?

சென்னை மாகாண வரவு செலவு திட்டம் என்ற முக்கியமான தஸ்தாவேஜியில் ஊடுருவிப் புகுந்து அதிலுள்ள சிக்கல்களை இன்னொரு தடவை எடுத்துரைப்போம்.

மூளைத் திருகாணி குறைந்தால்

'என் ஜாதி; உன் ஜாதி' என்று பிறர் சிண்டைப் பிடித்துக்கொண்டு சண்டை போடும் கூட்டமொன்று இந்தியாவில் இருக்கின்றது. அந்தப் புத்தியுள்ளவர்கள் பிராம்மணரா யிருப்பினும் சரி, அல்லாதவராயினும் சரி, மகமதியராயினும் சரி, கிறிஸ்துவராயினும் சரி, அவர்கள் மூளையைச் சோதித்துப் பார்த்தால் 'ஒரு திருகாணி குறைவு' என்பது தெரியவரும். மூளையில் திருகாணி சரியாக வேலை செய்யாத காரணத்தால்தான் ஜாதிச் சண்டையைக் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். 'இந்தியன்' என்ற பொது உணர்ச்சி அவர்களுக்குத் தோன்றுவதேயில்லை. ஜாதிச் சண்டைகளை அநுகூலமாகக் கொண்டு அந்நிய அரசாங்கமும் தன் பிடியைப் பலமாக்கிக் கொண்டிருக்கிறது.

இந்த ஜாதிப் பித்தத்தைப் போக்குவதென்ற நோக்கத்தோடு டாக்டர் மகமத் ஆலம் வட இந்தியாவில் ஒரு சங்கத்தை ஸ்தாபித்திருக்கிறார். அதில் அவனவன் தேச சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் 'இந்தியன்' என்ற உணர்ச்சியே கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப் படுகிறது. மேற்படி சங்கம் நீடூழி வாழ்க!

கெடு பிடி ஜப்திகள்

மனித தர்மம் என்று ஒன்றுண்டு. என்ன பெரிய உத்யோகஸ்தனுயினும் சரி, எவ்வளவு சக்திகளை உடையவனுயினும் சரி, மனித தர்மத்தை மீறி நடப்பது ஒரு போதும் சரியாகாது. 'இரக்கம், தயை' முதலியன மனித ஸ்வபாவம் மட்டுமன்று; மனித தர்மங்களும் அவையேயாகும். இந்த வருடம் கிஸ்தி வசூலின் பயனுக, அந்த நற்குணங்களின் வாசனை, இனி சர்க்கார் அதிகாரிகளிடம் இல்லாது போய் விடுமோ என்று எண்ண வேண்டி யிருக்கிறது.

உதாரணமாக நன்னிலம் தாலுகா தாசில்தாரின் ஆட்சியை எடுத்துக் கொள்வோம். கொடவாசல் ரேஞ்சு ரெவினியூ இனிஸ்பெக்டரும் ஒரு மனிதரென்றே எண்ணுகிறோம். சுற்றிலும் மிராசுதார்கள் படும் துயரத்தை அவர் மனிதக் கண்களால் பார்த்துக் கொண்டு தானிருக்கிறார். நெல்லை விற்பனை செய்ய முடிய வில்லை; விலையோ ரொம்ப கம்மி; இவ்வாறு தவித்துக் கொண்டிருக்கும் மிராசுதாரனிடம் 'தயை' காட்ட வேண்டியது மனித தர்மம். அந்த ரெவினியூ இனிஸ்பெக்டருடைய எண்ணத்தின்படி 'மண்ணாங் கட்டியும் மனித தர்மமும் ஒன்று' என்று தோன்றுகிறுப் போலிருக்கிறது; கிடக்கட்டும். அவர் நெய்க் குப்பை கிராமத்துக்குத் தனது பரிவாரங்களுடன் சென்றாராம். உடனே கிஸ்திப் பணத்தைக் கீழே வைக்கா விட்டால், சாமான்கள் ஜப்தி செய்யப்படு மென ஊராரிடம் உறுமினராம்.

கவுரவமான குடும்பத்தில் பிறந்த மிராசுதாரனுக்கு 'ஜப்தி' என்ற சொல்லைக் கேட்குங்கால் ஏற்படும் மனோ நிலை யிருக்கின்றதே, அதை வருணிக்க முடியாது. அங்கமெல்லாம் குறுகி கண்ணீர் ஆறுய்ப் பெருகும். ஆனல் 'கிஸ்தி' என்ற பதத்தோடு 'ஜப்தி' என்ற பதமும் இந்த நாட்களில் பல விடங்களில் உறவாடப் போகின்றது. அதற்கு பிள்ளையார் சுழி போட்டது போன்று கொடவாசல் ரெவினியூ அதிகாரி அன்று மிரட்டினர் போலும்!

ஒரு மிராசுதார் ஜப்திக்கு நெல்லைத் தருவதாகவும், பாத்திரங்கள் தருவதாகவும் சொன்னராம். ஆனல் ரெவினியூ இனிஸ்பெக்டரோ மகா சூழ்ச்சிக்காரர். மாடுகளை மட்டும் ஜப்தி செய்து கொண்டு, அந்த மாடுகளின் கன்றுகளைக் கொட்டிலிலேயே விட்டு விட்டுப் போய்விட்டார். மாடுகள் பவுண்டில் 'அம்மா' 'அம்மா' என்று கன்றை நினைத்துக் கதறவும், கன்றுகள் கொட்டிலிலிருந்து 'அம்மா', 'அம்மா' வென்று கதறவும் ஏற்பாடு செய்து விட்டார். இந்தக் குரல்களைக் கேட்டு, அவைகளுக்காக இரங்கி, எப்படியாவது மிராசுதார் சீக்கிரத்தில் கிஸ்தியைச் செலுத்தி விடுவானென்பது ரிவினியூ இனிஸ்பெக்டரின் எண்ணம். தாயைக் கன்றிடமிருந்து பிரிப்பது மனித தர்மமா? கொட்டிலிலுள்ள வாயில்லாச் சீவன்களை அவ்வாறு பிரித்துத் துன்புறுத்தியதைவிட அந்த மிராசுதாரரின் வீட்டில் புகுந்து சில 'மனிதர்களை' ஜப்திப் பொருள்களாகக் கைது செய்து கொண்டு போயிருந்தால் அவ்வளவு மனக் கலக்கம் ஏற்பட்டிராதென்று ஓர் நண்பர் எழுதுகின்றார். வாஸ்தவம் தானே!

இன்னெருவர் வீட்டில் புகுந்து சாதப்பானை, எண்ணெய்ப் பானை இவைகளை அந்த காருண்ய மூர்த்தி ஜப்தி செய்தாராம். இந்தச் செய்கைகளால் தமக்கு மேலதிகாரிகளிடமிருந்து 'ஸர்டிபிகேட்' கிடைக்குமென்பது அந்த உத்யோகஸ்தனின் எண்ணம் போலும்!

1933ம் வருஷத்தில், இந்திய சரித்திரத்தில் 'நன்னிலம் தாலுகா' ஓர் ஸ்தானம் பெற்று விடும் போலிருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஜப்தி கெடு பிடிகள் பலமாகிக் கொண்டே வருகின்றன. ஜப்தி வேலையில் மும்முரமாகும் அதிகாரிகளுக்கு ஓர் எச்சரிக்கை செய்கின்றோம். மனித தர்மத்தை மீறித் தாண்டவ மாடாதீர்கள்! ஜப்தி செய்யப்பட்ட பொருள்களைக் கண்டா கண்டபடி ஏலம் போட்டு விடாதீர்கள். தீர்வைகளை நிர்ணயிக்கும்போது நெல்லுக்கு சர்க்கார் என்ன விலையை நிர்ணயித்தார்கள் தெரியுமா? கலத்திற்கு 1 ரூபா 14 அணு! அந்த "ஒரு ரூபா பதினலணு என்பது சர்க்கார் மதிப்பு!" என்று ஏலம் போடுவது தான் சரி. அதற்கு அதிகமான விலைக்கு யாராவது ஏலமெடுத்தால் ஏலத்தை விடலாம். ஏலம் போகாவிடில் சர்க்காரே தங்கள் விலைக்கு நெல்லை எடுத்துக் கொள்ளலாகாதா வென்று ரிவினியூ இனிஸ்பெக்டர்கள் தாலுகா ஆபீசுக்கு எழுதிக் கேட்கலா மன்றோ! அவ்வாறு சர்க்காரிடம் கேட்பதற்கு தைரிய மில்லாத துக்கடா உத்தியோகஸ்தர்கள் ஏழை விவசாயிகளிடம் குதிப்பது சரியன்று என்பதை நினைப்பூட்டுகின்றோம்.

சாண் ஏற முழம் சறுக்கியது

"விலையெல்லாம் மலிஞ்சு போச்சு. பத்து ரூபாயில் குடித்தனம் நடத்தலாம். பாக்கியெல்லாம் பாங்கியில் போடலாம்" என்று உத்யோகஸ்தர் சொல்லிக் கொள்கின்றனர். சர்க்காரும் அவர்களிடம் சலுகை காட்டி சம்பளங்களை இச்சமயத்தில் உயர்த்தியும் இருக்கின்றனர். ஆனால் 'நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம்!' என்ற கதையாக உத்யோகஸ்தர் சம்பளங்கள் உயர்ந்த படியினால் கிராமங்களில் வரி செலுத்துபவரிடமிருந்து ஜரூராக வசூல் செய்ய சர்க்கார் முற்பட்டதென்பதை மறந்து விடுவதற்கில்லை.

"மாதச் சம்பளம் வாங்கும் வெட்டியான் நிலைமை, 4 வேலி நிலமுடைய மிராசுதாரனை விட உயர்ந்ததாகயிருக்கிறது" என்று ஒரு மிராசுதார் கூக்குரலிட்டிருக்கிறார். அவர் கூறுவது முற்றிலும் வாஸ்தவம். இத்தனைக்கும் காரணமென்ன? நெல் முதலிய தானியங்களின் விலை குறைந்து போனதேயாகும். 1927-28 வருஷங்களில் நெல் விலை ஏறியிருந்தது. மிராசுதார்கள் கொம்மாள மடித்துக் கொண்டிருந்தனர். சாண் ஏற முழம் சறுக்கிய கதையாக இப்போது விலைகள் அதி பாதளத்துக்குப் போயிருக்கின்றன. என் செய்வார்கள் பாவம்!

வருடாவருட விலை வாசிகளை (கல்கத்தாவில்) மதிப்பிட்ட கணக்கொன்று நமக்கு கிடைத்துளது. அதில் தானியங்கள் வருடா வருடம் விலையில் எவ்வாறு குறைந்து வந்திருக்கின்றன என்பது எளிதில் தெரிகின்றது. உதாரணமாக 1929ல் 124 ரூபாய்க்கு விற்கப்பட்ட அரிசியை இன்றைக்கு 58 ரூபாய்க்கும் குறைவாக விற்க வேண்டியிருக்கிறதாம். அதுவும் எளிதில் விற்பனையாக மாட்டேனென்கிறது.

	1929 செப்	1931 மார்ச்	1931 செப்	1932 மார்ச்	1932 ஜூன்
அரிசி	124	81	76	63	58
கோதுமை	135	72	64	77	79
பருத்தி	146	93	74	89	76
எண்ணை வித்துக்கள்	175	90	78	72	71

1933ம் வருஷத்திலோ விலை வாசிகள் இன்னும் படுத்து விட்டன. சர்க்கார் மட்டும் 1929-ம் வருஷத்தில் தந்த வரி விகிதத்தையே மிராசுதார்கள் இன்னமும் தர வேண்டுமென வற்புறுத்துகிறார்கள். ஏழை மிராசுதார்கள் என்ன செய்வர்? எங்கிருந்து தருவர்?

கல்லால் அடிப்பது யார்?

ஸர்வ தேச சங்கத்தை விட்டு ஜபபான் பிரிந்து விட்டதாகச் சொல்லி விடலாம். ஏனெனில் கூட்டத்திநின்று போகும் தருவாயில் ஜப்பானியப் பிரதிநிதி தமது கருத்தை விளக்கி ஓர் கதையைக் கூறியதுமன்றி ஜப்பான் தேசத்தைக் கண்டிப்பதற்கு எந்த ஐரோப்பிய தேசத்துக்கும் யோக்கியதையில்லையென்றும் கூறினார். அவர் கருத்தும் கதையும் பின்வருமாறு :—

ஏசுநாதரிருந்த காலத்தில் அவர் முன்னே ஒரு துன்மார்க்க ஸ்திரீ கொணரப் பட்டாள். அவள் செய்த துன்மார்க்கத்துக்கு கல்லாலடித்துக் கொல்வதென்பது அக்காலத்து வழக்கமாம்! அவ்வழக்கத்தின்படி உத்தரவு தரவேண்டுமென்று கல்லுங் கையுமாய் நின்று அநேகர் ஏசுநாதரைக் கேட்டனர். அப்போது ஏசுநாதர், "அவளைப் பாபியென்று நீங்களனைவரும் சொல்கிறீர்கள். உங்களில் யார் பாபம் செய்யாதவர்களோ அவர்கள் மட்டும் அவள் மீது கல்லை யெறியுங்கள்" என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் அங்கிருந்தவர் திகைத்தனர். ஒவ்வொருவராக கல்லைக் கீழே போட்டு விட்டு ஓட்டமெடுக்க ஆரம்பித்தனர். ஏனெனில் ஒவ்வொருவரும் மனதுக்குள் எண்ணிப் பார்க்கும்போது தாங்களும் பாபம் செய்தவர்களே யென்று அவரவர்களுக்கு தோன்றிற்று.

"இன்று ஜப்பானுடைய நிலைமை அந்த ஸ்திரீயின் கதியை யொத்திருக்கிறது. அவளைக் கல்லா லெறிய வேண்டு மென வல்லரசுகள் விரும்புகின்றன. ஆனால் ஆலோசித்துப் பார்த்தால் எந்த வல்லரசு உலகில் இதுவரை யோக்கியமாக நடந்து கொண்டிருக்கிறது?" என்று ஜப்பானிய ஸ்தானீகர் கூறினார். சீனா மீது பாய்ந்திருக்கும் ஜப்பானை எவரும் ஆதரிக்க மாட்டார்கள். ஆயினும் இந்தச் சண்டையின் பயனாக சர்வ தேச சங்கத்தின் வண்டவாளம் சிரிப்பாய்ச் சிரிக்கின்றது. பிற நாடுகளை அபகரிப்பதையும், பிற தேசத்திலிருந்து சுரண்டுவதையும் தொழிலாகக் கொண்டுள்ள ஏகாதிபத்தியங்கள் வாயை மூடிக் கொண்டு கிடக்கவேண்டுமென்று ஜப்பானியப் பிரதிநிதி கூறிய ஆணித்தரமான சொற்கள் அக்ஷர லக்ஷம் பெறுமன்றோ!

கடுதாசி தின்றால் பசி யடங்குமா?

டெல்லி சட்ட சபையில் வர விருக்கும் தீண்டாமை விலக்கு மசோதாக்களைப் பற்றி புது விதமான அபிப்பிராயம் ஒன்று தோன்றியிருக்கிறது. சட்ட சபையின் உதவியைக் கொண்டு இந்தச் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டு வரலாகாதென்று மாளவியாஜி கூட சொல்லப் புறப்பட்டிருப்பது ஆச்சரியமா யிருக்கிறது.

ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்கு இன்று தடையா யிருப்பது அரசாங்கத்தின் சட்டங்களே யாகும். பெரும்பாலான அபிப்பிராயம் ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்கு சாதகமா யிருக்கின்றது. எந்தச் சீர்திருத்தத்துக்கும் சில காக்கைக் கூட்டம் எதிர்த்தே தீரும். அவ்வாறு இச் சமயத்திலும் ஏதோ சில மடிசஞ்சிகள் எதிர்க்கின்றன வென்பது வாஸ்தவம். ஆனால் அது ஒரு 'சிறு பான்மைக் கூட்டம்' என்பதை மறந்து விடுவதற்கில்லை. இந்தப் போலி வைதிகர்களை தேசம் துளியாவது ஆதரிக்கவில்லை. ஏதோ சில மடங்களின் பணம் அங்கு மிங்கும் கொடுக்கப்பட்டு வருவதால் சில 'யதாபூர்விகள்' கூட்டங்கள் நடைபெறுகின்றன. காற்று எந்தப் பக்கம் அதிகமாக வீசுகிற தென்பது தெரியவில்லையா?

மடிஸஞ்சிகளைக் கெஞ்சுவதனாலும், அவர்களிடை பிரசாரம் செய்வதாலும், அவர்கள் மனதை மாற்றி விடலாமென மாளவியாஜி கூறுகின்றார். 'யதாபூர்விகளின்' வாசலில் நின்று கொண்டு 'எத்தனை பாட்டுப் பாடினாலும், எவ்வளவு ஜாலர் போட்டாலும் பயனில்லை' யென்று ராஜாஜி கூறியது முற்றிலும் பொருந்தும். சட்ட ரீதியான முட்டுக் கட்டையைப் போக்க சட்ட ரீதியான ஆயுதமே சரியான வழியாகும். முள்ளை முள்ளினாலேயே எடுக்கவேண்டு மன்றோ! "உணவுக்குப் பதிலாக உணவுச் சாமான்களைக் கடுதாசியில் எழுதி, கடுதாசியைத் தின்றால் பசி யடங்குமா?" என்று ராஜாஜி கேட்கின்றார். அதே மாதிரி 'யதாபூர்வி'களிடம் பிரசாரம் செய்வதால் மட்டும் இவ்விஷயத்தில் பலனேதுமில்லை யென்பதை மாளவியாஜி உணர்ந்து கொண்டு, தமது அபிப்பிராயத்தை அவர் மாற்றிக் கொள்ள வேண்டு மென்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றோம்.

கொம்பு முளைத்தவர்களா?

இந்தியாவை ஆள்வதற்கு இன்றி யமையாத கருவியாக இருப்பது 'இந்தியன் ஸிவில் ஸர்விஸ்.' அதைச் சேர்ந்த கலெக்டர் பிரபுக்களுக்கும் இதரர்களுக்கும் கொழுத்த சம்பளங்களைக் கொடுத்து சர்க்கார் போஷித்து வருகிறது. எந்த நாட்டிலும் இத்தகைய கொழுத்த சம்பளங்கள் ஸிவில் ஸர்விஸாருக்கு கிடைப்பதில்லை. இங்கிலாந்தில் 'கௌண்டி'களை ஆட்சி புரியும் அதிகாரிகளை விட, இந்தியாவில் ஒரு ஜில்லாவின் 'ஸர்வேசுவர'னான கலெக்டர் அதிகச் சம்பளம் வாங்குகின்றான் என்பது உலகறிந்த விஷயம்.

பம்பாய் சட்ட சபையில் இந்த ஸிவிலியன்கள் சம்பள சம்பந்தமாக ஒரு பேச்சு வந்தது. கவர்ன்மெண்டின் பிரதான காரியதரிசி அங்கு சொன்னதாவது:—"இந்தியாவுக்கு வந்தால் கவுரவமுள்ள ஆங்கிலேயருக்குப் பெரிய உத்யோகங்களே கொடுக்கப்பட வேண்டு மன்றோ! இங்கிலாந்தில் என்ன சம்பளம் வாங்குகின்றார்களோ அதே சம்பளத்திற்கு அவர்கள் இங்கும் உழைப்பதென்பது முடியாத காரிய மன்றோ!"

இந்தியாவில் காலடி வைத்ததும் ஸிவிலியன்களுக்கு கொம்பு முளைத்து விடுகிறதா என்ன? நியாயப்படி . பார்க்கப் போனால் இங்கிலாந்து கொடுப்பதில் பத்திலொரு பங்கு சம்பளமே ஏழை இந்தியா தரவேண்டும். அதற்கு ஒப்புக் கொள்ளாத பெரியார்களை இந்தியாவுக்கு வரவழைப்பானேன்? வேண்டு மென்றால் கலெக்டர் உத்தியோகங்களுக்கு 100 ரூபாய் சம்பளத்தில் கூட தேர்ச்சியுள்ள இந்தியர்கள் கிடைப்பார்க ளென்பது எமது அபிப்பிராயம். நிற்க,

சீமையில் பார்லிமெண்டில் சமீபத்தில் ஓர் பேச்சு நடந்தது. பிரிட்டிஷாரால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டுள்ள ஆபீசர்களின் சம்பளத் தொகைகள் குறைக்கப் படுவது பற்றி வாதம் நடந்தது. விண்டர்டன் பிரபு பேசிய போது, 'இந்தியாவின் வரிகளைக் குறைக்க வேண்டுமே யன்றி அதிகாரிகளின் சம்பளங்களை அதிகமாக்க லாகாது' என்று கூறினார்.

இதை இந்திய சர்க்கார் உணர்ந்தால் ஸிவிலியன்களுக்குச் சலுகை பாராட்டக் கூடாது. அந்தக் கோஷ்டியின் சம்பளங்களை குறைப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு இந்த சர்க்கார் செய்யுமா வென்று கேட்டால் அது தான் சந்தேகம்.

மோர் வீரரும், பிரம்பு வீரரும்

ஒரு காலத்தில் டெல்லி சட்ட சபையில் 'வெடி குண்டு' வெடித்தது. வெடி குண்டு வெடித்த டெல்லி சபைக்குச் சென்று வேடிக்கை பார்க்க விரும்புகிறவர்களுக்கு 'டிக்கட்' இன்றைக்கும் கிடைத்துக் கொண்டு தானிருக்கிறது. ஆனால் 'சீன வெடி'ப் புகழ் பெற்ற சென்னைச் சட்ட சபைக்குள் புகுவதற்கு அநுமதிச் சீட்டு கிடைக்க வேண்டுமானால் ரொம்ப கஷ்டப்பட்டால் தான் இப்போது கிடைக்கும். 'வோட்டு' வாங்கிக்கொண்டு வந்து குந்திக் கிடக்கும் 'பிரதி நிதிகள்' என்ன தான் செய்து கிழிக்கிறார்களென்பதைக் காண பொது ஜனங்களை அநுமதிக்க வேண்டாமா? அது அவர்கள் உரிமை யல்லவா? 'டிக்கட்' கிடைப்பதற்கு இவ்வளவு சங்கடங்களையா வைப்பது? சென்ற 24-ம் தேதி யன்று 'விஸிட்டர் காலரி' அத்தனையும் வெறுமனே யிருந்ததைக் கண்ட போது இந்த எண்ணங்களே ஏற்பட்டன.

சட்ட சபையில் 'கேள்வி கேட்கும் சமயம்' என்று ஒரு காலம் உண்டு. மந்திரிமார்கள் தாங்காமல் விழித்திருப்பதற்கு சூடு கொடுக்கும் சமய மென்றே அதைச் சொல்ல வேண்டும். அன்று முதன் முதலில், சட்ட மந்திரி கிருஷ்ணன் நாயருக்கு கேள்விகள் போடப்பட்டன. சிறையில் ராஜீயக் கைதிகளுக்கு மோர் தருவதென்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களா வென்று ஒருவர் கேட்டார். "இன்னும் அது ஆலோசனையி லிருக்கிறது, முடிவு கூற ஒரு மாதம் ஆகலாம். ஒரு வருஷம் ஆனாலும் ஆகலாம்" என்ற திமிரான பதில் அதற்குக் கிடைத்தது. "அடுத்த கோடை மாதத்துக்குள்ளாவது கைதிகளுக்கு மோர் கிடைக்குமா?" என்று ஒருவர் கேட்டார். "யோசிப்போம்!" என்றார் கிருஷ்ணன் நாயர்.

மோரில்லாது வெறும் குழம்புச் சோற்றையே கைதிகள் தின்னும்படி செய்வது சிறைக் கொடுமைகளில் ஒன்று. மோரில்லாது சாப்பிட்டறியாத தென்னிந்தியன் சிறைக்குள் போய்ச் சில நாளானவுடன், சீத பேதியினால் சதா அவஸ்தைப் படுகின்றான். நாயர் 'மோர் தருவது பற்றி ஆராய்ச்சி' செய்கின்றாராம். மரத்திலிருந்து மோர் எடுக்க முடியுமா வென்று பரீக்ஷை பார்க்கின்றாரா? அல்லது கடலினின்று மோர் எடுக்க முயல்கின்றாரா? என்ன ஆராய்ச்சி செய்கின்றார்? மனித சரீரத்தினால் மோரை ஜீர்ணிக்க முடியுமா வென்று ஆராய்ச்சி செய்கின்றாரா? கிருஷ்ணன் நாயர் அன்று சொன்ன பதிலைப் பார்த்தால் அவருக்கு 'மோர் வீரர்' என்ற பெயர் முழுதும் தகும். அவருக்கு மட்டுமின்றி அவரது சந்ததிக்கே குடும்பப் பெயராக அதைச் சூட்டிவிடலாமென ஒருவர் குறிப்பிட்டார். நிற்க,

சட்ட சபையில் அடுத்தாற்போல கேள்வி மழையில் நின்றவர் ஸர் மகமத் உஸ்மான் என்ற ஹோம் மெம்பர். "உடையார்பாளையம் என்ற ஜமீனில் விவசாயிகள் தலைவரொருவரை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் அவமதித்ததுண்டா?" என்று கேள்வி போடப்பட்டது. அதற்குப் பதில் சொல்லும்போது "அவன் ஒரு கைதி தானே" என்று ஏளனமான குரலில் மகமத் உஸ்மான் பதில் சொன்னார். 'கைதி' என்று ஒரு கனவானை ஏளனமாகச் சொல்ல வேண்டாமென்று சபையோர் உஸ்மானுக்கு அறிவித்தனர். "ராஜீயக் கைதியா யிருந்தாலென்ன? திருட்டுக் கைதியா யிருந்தாலென்ன? கைதி கைதி தானே" என்ற அபிப்பிராயத்தையே உஸ்மானின் வாய் கக்கிற்று. இது மிக்க அழகான பதிலல்லவா?

அன்று கேள்வி சமயத்தில் கிடைத்த சில புள்ளி விவரங்களும் கவனிக்கத் தக்கவை. சின்ன வயதுப் பெண்களை கலியாணம் செய்து வைத்ததற்காக இந்த மாகாணத்தில் சாரதாச் சட்டத்தினால் தாக்கப் பட்டவர்களின் தொகை அன்று கூறப்பட்டது. 1930ல் நான்கு, 1931ல் ஒன்பது.

அடுத்தாற் போல சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக ஜனவரி 4-ம் தேதி யன்று இம் மாகாணத்தில் எத்தனை பேர் கைதியாக்கப் பட்டார்களென்று கேள்வி கேட்கப்பட்டது. பதில் '41' என்று கிடைத்தது. தற்போது பிரம்படியினால் சட்ட மறுப்புக் கூட்டங்கள் கலைக்கப் படுவதாக ஹோம் மெம்பர் ஒரு கேள்விக்கு பதிலளித்தார். இவரைத் 'தடி வீரர்' என்று அழைப்பதா 'பிரம்பு வீரர்' என்று அழைப்பதா? இந்த மகமத் உஸ்மான் இங்கிலாந்து போன்ற சுயேச்சை நாடுகளில் ஹோம் மெம்பரா யிருப்பாராகில், இந்த மாதிரி 'பிரம்படி' ராஜ்யம் நடத்துவதற்கு அவருக்கு தைர்யமிருக்குமா வென்ற சந்தேகமும் ஏற்படுகிறதன்றோ?

இந்தியனும், ரயில்வேயும்

இந்தியாவில் அநேக ரயில்வேக்கள் இப்போது சர்க்காரால் நிர்வகிக்கப் படுகின்றன. அந்த ரயில்வேக்களில் பெரிய சம்பளமுடைய உத்யோகங்களில் பெரும்பாலானவை ஐரோப்பியருக்கே போய்க்கொண் டிருக்கின்றன. ரயில்வேயில் பெரிய உத்தியோகங்களில் அதிகமாக இந்தியர்களையும் நியமிக்க வேண்டுமென்று டெல்லி சட்ட சபையில் அநேகர் கரடியாய் கத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி பெரிய உத்யோகங்களில் 24 உத்யோகங்கள் 1925ல் இந்தியருக்குத் தரப்பட்டிருந்தன. 1932ல் 35 பேருக்கு தந்திருக்கிறார்களாம். நூற்றுக் கணக்காக உத்தியோகங்களை ஐரோப்பியருக்குக் கொடுத்து விட்டு மிஞ்சியதை மட்டும் இந்தியர்களுக்குக் கொடுப்பது, கண்ணைத் துடைக்கும் விவகாரமா யிருக்கிறதே யன்றி வேறில்லை.

1931-32ம் வருஷத்தில் சர்க்கார் ரயில்வேக்களில் 32 பெரிய உத்தியோகங்கள் காலியாயின. அதில் 7 உத்யோகங்கள் ஐரோப்பியர்களுக்குத் தரப்பட்டன. பாக்கி 25 இந்தியர்களுக்கென்று ஒதுக்கினார்கள். இந்த இருபத்தைந்தின் இரகஸ்ய மென்ன தெரியுமா? அதில் 16 ஐ ஆங்கிலோ இந்தியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கு இந்தியாவில் பிறந்த குஞ்சுகளுக்கும் கொடுத்திருக்கிறார்கள்.

ஆங்கிலோ இந்தியர்களுக்குச் சலுகை காட்டுவதைப் பற்றி நமக்குக் கவலை யில்லை. ஆனால் 25 உத்தியோகங்களும் இந்தியர்களுக்குத் தரப்பட்டிருப்பதாகக் கணக்குக் காட்டுவதைத்தான் நம்மால் பொறுக்க முடிய வில்லை.

இந்த உத்தியோகங்களில் யாரையாவது வைப்பதானால் அவருக்கு 'தேர்ச்சி' யிருக்க வேண்டுமென சர்க்கார் சொல்கிறது. அப்படியானால் நாளைய தினத்திலேயே சர்க்கார் அத்தனை ஐரோப்பிய உத்யோகஸ்தர்களையும், ஆங்கிலோ இந்தியர்களையும், இந்தியர்களையும் வைத்து ஒரு பரீக்ஷை நடத்திப் பார்க்கட்டும். அதில் நல்ல 'மார்க்' வாங்குகிறவர்களுக்கு உத்யோகங்களைப் பரிசாகத் தரட்டும். அப்படிச் சர்க்கார் செய்வார்களானால் இப்போ திருப்பதை விட பன் மடங்கு உத்யோகங்கள் இந்தியர்களுக்குக் கிடைக்கு மென்பது முற்றிலும் நிச்சயம்! சர்க்கார் செய்யுமா?

கல்யாணப் பாடங்கள்

"அமெரிக்காவில் பட்லர் யுனிவர்ஸிடி என்ற ஸர்வ கலாசாலையில் 'கல்யாணம்' என்ற விஷயத்தில் பாஸ் செய்வதற்காக வகுப்புகள் நடத்தப் படுகின்றன. கல்யாணமானவர்களுக்கு இன்பமாக வாழவேண்டிய வழிகளைக் காட்டிக் கொடுப்பதற்காக மேற்படி பாடங்கள் நடத்தப் படுகின்றன. விவாகமானவர்கள் சரீரம், புத்தி, பொருளாதார நிலை முதலியவைகளில் எவ்வாறு மேம்படுவது என்பது பற்றி அறிஞர்கள் பிரசங்கங்கள் செய்கிறார்கள்" என்று ஸுபாஷ் சந்திர போஸ் ஒரு பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றார். சென்னை யுனிவர்ஸிடிக்கு ஓர் ஆலோசனை சொல்லித் தர விரும்புகின்றோம். சென்னையிலும் கல்யாண நோக்கமாகப் படிக்கும் மாணவர்கள் பலருண்டு. ஆட்டைக் கொழுக்க வைத்து விற்பனை செய்வது போல பையனைப் படிக்க வைத்து வரதக்ஷிணையைப் பலமாக வாங்கும் தாய் தந்தையருண்டு. அந்தப் பையன்களுக்கு கட்டாயம் 'கல்யாணப் பாடங்கள்' நடத்த வேண்டியது அவசியமன்றோ! வரதக்ஷிணையின் கொடுமை, பெட்டைக் கோழிக்கு அடிமை யாகா திருத்தல், மண வாழ்க்கையிலும் பிரும்மசரியம் அனுஷ்டித்தல், போன்ற அருமையான விஷயங்களைப் பாடம் சொல்லித் தரலா மன்றோ!

படிப்பின் பயன் இதுவோ?

வங்காளத்தில் கல்லூரி மாணவர்களில் 2260 பேர்களை வைத்தியர்கள் பரிசோதித்தார்கள். அவர்களில் பெரும்பாலோருக்கு ஏதேனு மொரு வியாதி யிருப்பது தெரிய வந்தது. அதில் கால்வாசி மாணவர்களுக்கு 'சக்திக் குறைவு' இருப்பதாக வைத்தியர்கள் கண்டு பிடித்தார்கள். மற்றொரு கணக்குப்படி கால்வாசிப் பேருக்கு 'தோல் வியாதி'கள் இருந்தன. கால் வாசிப் பெயருக்கு ஹிருதய ரோகங்கள் இருந்தன. பலருக்கு 'பல் ரோகங்கள்' போன்ற வியாதிகளிருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது. ஆகவே தற்காலக் கல்வி முறையின் கீழ், படிப்புக்காகக் காசைக் கொட்டிக் கொடுப்பது போதாதென்று, ஆரோக்கியத்தையும் கெடுத்துக் கொள்வதாக இருக்கிறது. தற்போதுள்ள கல்வி முறையை மாற்றியாவது அமைக்க வேண்டும். அல்லது தேசத்தில் கல்விச் சாலைகளே இல்லாதவாறு செய்ய வேண்டும். அப்போது தான் இளைஞர்களுக்கு க்ஷேமம்!

நமது கிளிஞ்சல் குவியல்

சென்னையில் சங்கிலியை இழுத்து ரயிலை நிறுத்தியதற்காக மௌலானா அப்துல் காதர் என்பவருக்கு 5 மாதமும் 20 ரூ. அபராதமும்.

கள்ளிக்கோட்டையில் கள்ளுக் கடை மறியல் செய்ததற்காக 4 தொண்டர்கள் கைதி.

மதுரையில் ஊர்வலமும், விதேசி ஜவுளிக் கடை மறியலும் தொண்டர்கள் செய்து வருகிறார்கள். போலீசார் பலாத்காரமாக அவர்களை இழுத்தும், அடித்தும் கலைத்து வருகின்றனர்.

குண்டூரில் துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக ராகவய்யா சௌத்ரி என்பவருக்கு 6 மாதமும், 300 ரூபாயும்.

அலகாபாத்தில் கைதியான தொண்டர்களில் 9 பேருக்கு தலா 6 மாதம் தண்டனை.

கான்பூரில் போலீசார் சில வீடுகளில் புகுந்து டீ. வாலாவின் சரித்திர புஸ்தகத்தைப் பறிமுதல் செய்து விட்டனர்.

ஜப்பல்பூரில் 1000 ரூ. ஜாமீன் கேட்டதின் பேரில் 'ஜெயின் ரசாயனசாலா பிரஸ்' கொடுக்க மறுத்து, பிரஸ்ஸை மூடி விட்டது.

ஜப்பல்பூரில் ஜாமீன் கொடுக்க மறுத்ததற்காக பிகாரி லால் படேல் என்பவருக்கு ஒரு வருஷம் கடுங்காவல்.

லக்ஷ்மணபுரி சிறையில் இருக்கும் மீரட் கைதி ஒருவருக்கு ஒரு கண் குருடாய்ப் போய் விட்டது. மற்றொரு கண்ணும் அபாய நிலைமையில் இருக்கிறது. மருந்துச் செலவு கூட கொடுக்க முடியாதென்று ஜெயில் அதிகாரிகள் கூறி விட்டனராம். மாகாண மகாநாடு கூட்டுவதற்கு வந்த பண்டித பத்ரீதத் பாண்டே என்பவர் 23 இதர காங்கிரஸ்காரர்களுடன் கைதியானார்.

பிரிட்டிஷ் சர்க்கார் மார்ச்சுமீ 3உ வெளியிட விருக்கும் அறிக்கையை ஆலோசிக்க சாவகாசம் வேண்டுமென்று பலர் விரும்பியதால், அடுத்த காங்கிரஸ் மார்ச்சு மாதக் கடைசிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

"ஹரிஜனங்களின் உயர்தர, மத்தியதர படிப்புக்கு உபகாரச் சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யப் படுகிறது. அனந்தபூர், கர்நூல் ஜில்லா போர்டுகள் இலவசமாகக் கல்வி கற்பிப்பதாக தீர்மானித்திருக்கிறார்கள். பரீக்ஷை பிரவேசக் கட்டணம் வேண்டாமென்று ஆந்திர சர்வ கலா சாலை தீர்மானித்திருக்கிறது" என்று ஆந்திர மாகாண காரியதரிசி அறிவிக்கிறார்.

ஆலயப் பிரவேச மசோதாவை பூரணமாக ஆதரித்து கும்பகோணமும், ஸ்ரீரங்கமும் தீர்மானங்கள் நிறைவேற்றி யிருக்கின்றன.

சிட்டகாங்கில் வசூலாகாத தண்ட வரியை தள்ளுபடி செய்யப்போவதில்லை யென்றும், 871 ஸ்தாபனங்கள் சட்ட விரோதமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற தென்றும், வங்காள சட்ட சபையில் ஒருவர் கேள்விக்குப் பதில் கூறப்பட்டது.

நிலவரியில் 100 க்கு $12\frac{1}{2}$ வீதம் குறைக்க வேண்டுமென்ற சென்னைச் சட்டசபை தீர்மானத்தை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்காததைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று வந்த தீர்மானத்தை சபைத் தலைவர் அனுமதிக்க மறுத்து விட்டார்.

நிலவரி இலாகா நிர்வாகத்தைப் பற்றி வங்காள கவர்ன்மெண்டார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். அதில் 19920 பாக்கிதார்களில் 1177 பேர்களுடைய எஸ்டேட்டுகள் ஏலத்துக்கு வந்ததென்றும், அவைகளில் 36ஐ கவர்ன்மெண்டாரே வாங்கிக் கொண்டதாகவும் கூறப்படுகின்றது.

"தேசத்தாரே எனது சுற்றத்தார்; அவர்களின் ஆசீர்வாதமே எனக்கு மருந்து; தேச மக்களின் அன்புக்குப் பாத்திரனா யிருக்க கடவுளைப் பிரார்த்திக்கிறேன். உயர்த்திய கொடியை தாழ்த்த வேண்டாம். சுதந்திர உதயம் நெருங்குகிறது" என்று சுபாஷ் சந்திர போஸ் கப்பலிலிருந்து ஒரு செய்தி விடுத்திருக்கிறார்.

இரண்டு நாள் சண்டைக்குப் பிறகு பெய்பியோவை சீனா காலி செய்துவிட்டு அதற்கு வடக்கே அணிவகுத்திருக்கிறதாம். கைலுவை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டதாம்.

Edited and Published by S. Subramaniam and
Printed by M. R Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.